## தே.மு.தி.க. நிறுவனர்

# கேப்டன் விஜயகாந்த் நினைவு நாள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!


சென்னை, டிச. 30-

தேசிய முற்போக்கு திராவிடக் கழக நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவுநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**‘கேப்டன்’ விஜயகாந்த் நினைவு நாள், ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமை நண்பர் தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நற்பணிகளை நினைவு கூர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.12.2025) கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கோயம்பேட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் பெயரை மாற்றி ஏழைத் தொழிலாளர்களை வஞ்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாகை மாவட்டத்தில் 6 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

## தி.மு.க. – கூட்டணி கட்சியினர் பங்கேற்பு!

நாகை, டிச.30-

ஒன்றிய பா.ஜ.க. மோடி தலைமையிலான அரசு ஏழைத் தொழிலாளர்களை வஞ்சிக்கும் வகையில் 100நாள் வேலை வாய்ப்பு திட்டம் என்ற தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஏழை தொழிலாளர்களுக்கு குடும்பத்திற்கு 100 நாற்கள் வேலை வாய்ப்பு தரும் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை முடக்கும் வகையில் அந்த திட்டத்தை பெயரை மாற்றி அமைக்கவும், அந்தப் பெயரில் உள்ள மகாத்மா காந்தி பெயரை நீக்கவும் ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது. இதையடுத்து தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசையும், துணை போகும் அதிமுகவையும் கண்டித்து. கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து நாகை மாவட்டத்தில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு முற்போக்கு கூட்டணி சார்பில் நாகை மாவட்டத்தில் நாகை, திருமுருகல், கீழ்வேளூர், , தலைஞாயிறு, வேதாரணியம் ஆகிய 6 ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நேற்று முந்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நாகையில்

நாகை மாவட்டம் நாகை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகத் தலைவர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தலைமை செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் க.இராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை வடக்கு ஒன்றிய செயலாளர் சிக்கல் என்.ஆனந்த, நாகை நகர கழக செயலாளர் இரா மாரிமுத்து, நாகூர் நகர செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், நாகூர் காங்கிரஸ் கட்சி மூத்த உறுப்பினர் ராமலிங்கம், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் அனஸ், ம.தி.மு.க. நகர செயலாளர் சோழராஜேந்திரன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

### கீழையூரில்

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம், வேளாங்கண்ணி பேரூர் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் கீழையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்

கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன் தலைமையிலும் கீழையூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சோ.பா. மலர்வண்ணன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், கோசி.குமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மு.ப.ஞானசேகரன் மற்றும் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் கழகத்தினர் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

### கீழ்வேளூரில்

கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் தலைமை செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ப.கோவிந்தராஜன் தலைமையிலும், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன், கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அமிர்தராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த பாண்டியன், முத்தையன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த காசிநாதன், நாகராஜன் மற்றும் கூட்டணி கட்சியினர் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கழகத்தினர் ஏராளமான கலந்து கொண்டனர்

### வேதாரண்யத்தில்

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதாரத்தினம், கழகத் தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.மறைமலை, வேதாரண்யம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் உதயம் வே.முருகையன், கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் என்.சதாசிவம், வேதாரண்யம் நகர திமுக செயலாளர் புகழேந்தி, காங்கிரஸ் கட்சிய மயிலாடுதுறை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜேந்திரன், இந்திய கம் யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ். ஈ.பழனியப்பன், உமா செந்தாமரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அ.பாரிபாலன், அருள், காங்கிரஸ் கட்சி மாவட்ட பொறுப்பாளர் விவேக், விடுதலை சிறுத்தை மாவட்ட செயலாளர் செல்வராஜ், மனிதநேய ஜனநாயக கட்சி நகர செயலாளர் மன்சூர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் செயலாளர் அம்பிகாபதி மற்றும் கூட்டணி கட்சியினர் கழக ஒன்றிய நகர நிர்வாகிகள் கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### திருமருகலில்

திருமுருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உன் திருமருகல் ஒன்றியம், திட்டச்சேரி பேரூர் திமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக அவை தலைவர் ப. செல்வம் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர்கள் திருமுருகல் தெற்கு ஆர்.டி. எஸ்.சரவணன், திருமகல் வடக்கு செல்வ. செங்குட்டுவன். திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமது சுல்தான் ஆகியோ முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன், பொதுக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம். மாவட்ட சார்பணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இளம் சுந்தர், மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கழகத்தினர் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

### தலைஞாயிறில்

தலைஞாயிறு ஒன்றியம் தலைஞாயிறு பேரூர் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் மகா குமார் தலைமையிலும் தேர்வு செயலாளர் சுப்ரமணியன் முன்னிலையில் நடப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம் நிலமேகம், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புவனேஸ்வரி மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கழகத்தினால் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

## ஸ்டிக்கர்பாடி...



சசிகலா காலில் விழுந்து
கை மாத்தா வாங்குன
கட்சியின் மீது
“அதிபர் எடப்பாடி” ன்னு
ஸ்டிக்கர் ஒட்டுன யோக்கியன்
தானே நீ...

“மீசை வச்ச ஆம்பளயா இருந்தா
வேட்டி கட்டுன ஆம்பளயா
இருந்தா வா” ன்னு ஏகத்துக்கும்
கூவிப்புட்டு அடுத்து வந்த இடைத்தேர்தல்களில்
களத்துக்கே வராம கம்பி நீட்டிய தொடை நடுங்கி
நீ தானே..

மிஸ்டர் முகமூடி

நீ பேரு மட்டும் வச்சிப்புட்டு
சோறு வைக்காம
கம்பி நீட்டுன பல திட்டங்களுக்கும் சேர்த்தே உயிர் கொடுத்தது
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின்
திராவிட மாடல் ஆட்சி தான்..

அதுக்கு பேரு ஸ்டிக்கர் ஒட்டுறது கெடையாது..

அது வன்மம் இல்லாத பொறுப்புணர்வு..

அப்படிப் பார்த்தா தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட
கோயம்பேடு மார்க்கெட் தொடங்கி பன்நோக்கு
மருத்துவமனை வரை எண்ணற்ற
பல திட்டங்கள் ஏராளமான
பாலங்கள் பலவும்
தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு அ.தி.மு.க.
ஆட்சியில் ரிப்பன் வெட்டப்பட்டது தானே..

இதெல்லாம் உமக்கு எங்கே விளங்கப் போகுது..

சார்வாள்
நீங்களே கம்பராமாயணத்தை
சேக்கிழார் பேர்ல ஸ்டிக்கர் ஒட்டிய மேதை அல்லவோ...

என்னநாஞ்
சொல்றது!



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகில் உள்ள ஒன்னட்டி பகுதியில் தனியார் தங்கும் விடுதியில் கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த பன்னீர்செல்வம், சதீஷ்குமார் ஆகிய இருவர் மேல் எதிர்பாராத விதமாக மண் திட்டு இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கி இருவர் உயிரிழந்த செய்தி அறிந்து தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் சென்று அவர்களின் குடும்பத்தினரிடம் ஆறுதலை தெரிவித்தனர். உடன் அவைத்தலைவர் போஜன்,கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம்.ஆர். சபாபதி

**டிசம்பர் 30 (2009)**



சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

‘தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**